# இலவசமாக கிடைக்கும் விலையேறப்பெற்ற பரிசு



<u>முகவுரை</u>

மனிதர்களாகிய நாமனைவரும் அறிந்ததும் பொதுவாக ஏற்றுக்கொள்கிறதுமான "சத்தியம்" என்னவென்றால் "விலையேறப்பட்ட ஏதாவதை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அதற்காக தியாகங்கள், செலவுகள், பரிசுகள் ஆகியவற்றை செலுத்துவது அத்தியவசியம் என்பதாகும்."

உதாரணமாக ஒரு வைத்தியராக வேண்டுமென்கிற வாலிபனுக்கு, தமது இலக்கை நோக்கிச் செல்வதற்கு பெரும் முயற்சியுடன் தமது படிப்பிற்காக காலத்தை செலவிட வேண்டும். அதேபோல் தமது தொழிலில் உயர்நிலை அடைவதற்காக அநேக தியாகங்களை செய்யவும், தான் ஆசைப்படுகிற அநேக காரியங்களை விட்டுவிடவும், நேரிடும். அதனால் நமக்கு ஏதாவது இலவசமாக கிடைக்கின்றது என்ற செய்தியை கேட்டவுடனேயே நமக்குள் ஓர் விசுவாசம் ஏற்படுவதை விட அச்செய்தியை குறித்து சந்தேகமே ஏற்படுகிறது.

எனதன்பான சகோதரனே சகோதரியே, "இச்சிறிய புத்தகத்தினால்" நான் உங்களுக்கு சொல்லப்போவது என்னவென்றால், உங்களால் நம்ப முடியாதளவு அற்புதமான செய்தியை சொல்வதற்காகும். அது என்னவென்றால் மனித வாழ்க்கையில் பெற்றுகொள்ளக்கூடிய மிகவும் விலயேறப்பட்ட ஈவை (பரிசை)உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது என்பதை குறித்தாகுது.

இவ்விலையேறப்பெற்ற இரட்சிப்பைப்பெற்றுக்கொண்ட நான் உங்களிடம் கேட்டிக்கொள்வது என்னவென்றால் உங்களின் பெருமதியான காலத்தில் அரைமணித்தியாலத்தை செலவிட்டு திறந்த மனதுடன் இப்புத்தகத்தின் இறுதிமட்டும் வாசியுங்கள் என்பதாகும்.

## 1.நவீன சமுதாயத்தில் உள்ள சில மறைமுகமான குணாதியங்களால் மனித வீழ்ச்சிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

(i) மனிதனுடைய அறிவு மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நவீன தொழில்நுட்பம் எந்தளவு முன்னேறி இருக்குமென்றால் இன்னும் நாம் வாங்கும் நவீனரக கையடக்க தொலைபேசி இன்னும் ஒரு வருடத்தில் அதைவிட குறைவான விலைக்கு மேலதிகமான வசதிகளுடன் கூடியதொன்றை வாங்கலாம்

இவ்விதமாக மிகவும் வேகமாக வளரும் மனித அறிவு கலாச்சாரத்தை தரம் குறைவாகவே எடைபோடுகிறது. மனித கலாச்சாரம் முன்னேற்றமடையும் போது அவனுடைய நடத்தையிலும் ஒரு முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம். ஆனால், நவீன சமுதாயம் இதைவிட வித்தியாசமான நிலைமையை காட்டுகிறது.

முன்னேறிய நவீன சமுதாயத்தில் அநியாயம், வஞ்சகம், களவு, இலஞ்சம் மோசடிகளில் வளர்ச்சியை தவிர குறைவே இல்லை. எனதன்பான சகோதர சகோதரியே இதற்கு காரணம் என்னவாக இருக்குமென்று நினைத்து பார்த்து உள்ளீரா? சிலநேரம் அப்படி நீங்கள் நினைத்திருந்தால் இது மனிதனுடைய உள்ளத்திலிருந்து எழும்பும் சுபாவம் என்று முடிவுக்கு வந்திருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட விதமாக உலகத்தில் அறிவு வேகமாக வளரும் இக்கால கட்டத்தில் மனிதனுடைய வீழ்ச்சிக்கு காரணம் என்னவென்று இச்சிறிய புத்தகத்தினூடாக உங்களுக்கு கிடைக்குமென்று நான் விசுவாசிக்றேன்.

### (ii) நன்மைக்கும், தீமைக்கும் இடையே ஏற்படுகிற போரட்டத்தில் தீமையேவெற்றி பெருகின்ற சுபாவம்.

முன்னேறிக்கொண்டிருக்கும் மனித சமுதாயத்தில் நம்மால் அடிக்கடி காணக்கூடியதாக உள்ள பிரச்சினை என்னவென்றால் நன்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள போராட்டமாகும்.

அதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால் சமுதாயத்தில் உயர்ந்த ஸ்தானங்களுக்குச் செல்ல வேண்டுமென்கிற சிலர் எடுக்கும் விடா முயற்சியாகும்.

ஒருவர் தமது வாழ்க்கையில் மேலான இலக்கை நோக்கி செல்ல முயற்சி செய்வது வரவேற்கக்கூடிய ஓர் நல்ல விஷயமாகும். ஆனால் அதற்காக, அக்குறிகோலுக்காக “தவறான முறைகளை” பிரயோகிப்பது தவறாகும். மற்றவர்களின் உரிமைகளை மதிக்காமல் மிகவும் சுயநலமாக செயல்படுகின்ற மனித இனம் உருவாகுவதே இதன் விளைவாகும். அதனால் ஒருவருக்கொருவர் இடையே உள்ள ஒத்துழைப்புக்கு பதிலாக போட்டி மனப்பான்மை அதிகரித்து தன்னுடைய முன்னேற்றத்தை மாத்திரம் நினைக்கின்ற மனிதர்களின் அளவு வேகமாக அதிகரிக்கின்ற ஓர் சமுதாயம் உருவாகின்றது.

இம் மோசமான நிலை நிமித்தமாக இன்று நமது சமுதாயத்தில் காணக்கூடிய சில தவறான காரியங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

(I) இயன்றவர்கள் இயழாதவர்களிடம் தவறான பிரயோசனங்களை எடுத்தல்.

(ii) சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அநேகருக்கு லஞ்சம் கொடுத்தல்.

(iii) தன்னுடைய பதவி உயர்வுக்காக மற்றவர்களை காட்டிக்கொடுத்தலும் வதந்திகளை பரப்புவதும்.

(iv) மனிதன் தன்னுடைய பதவி, நிலை, பணம் ஆகியவற்றை தகாத விதமாக பாவித்தல்.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் நிமித்தமாக சமுதாயத்தில் நன்மை, தீமை, என்ற போராட்டத்தில் கடைசியாக தீமையே வெல்லுகின்றது.

எனதன்பான சகோதர சகோதரியே தீமையே ஜெயிக்கிற சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை உண்டுபண்ண உங்களால் முடியாது என நினைக்கிறீர்களா?

**உண்மையாகவே உங்களால் மாற்ற முடியும் என்பது எங்களுடைய விசுவாசமாகும்.**

## 2. மேற்குறிப்பிட்ட எதிர்மறையான காரியங்கள் சமுதாயத்தில் ஏற்பட பிரதான காரணங்கள்.

நவீன சமுதாயத்திலுள்ள எதிர்மறையான குணாதிசயங்களை நோக்கி பார்க்கும் போது மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு மேலான மிகவும் மோசமானவைகள் உலகில் எல்லா நாடுகளிலும் காணலாம்.

அவையாவன :-

(i) போதை பொருட்களுக்கு அடிமையாதல்.
(ii) அற்ப காரியங்களுக்கு மனித கொலைகள்.
(iii) கற்பழிப்புகள் அதிகரித்தல்.
(iv) சிறுவர் துஷ்பிரயோகம்.
(v) கருவழித்தல்
(vi) விவாகரத்துகள் அதிகரித்தல்
(vii) ஓரின சேர்க்கைகள்.
(viii) சமுதாயத்தில் பாகுபாடின்றி களவு, மோசம், ஊழல்கள் நடத்தல்.
(ix) அடியாட்கள் கூட்டம் பெருகுதல்
(x) நாட்டில் அநேகர் நாட்டு சட்டத்தை மீறல்.
(xi) பொய் சொல்லுதலை மிகவும் ‘‘அற்பமாக சமுதாயம்’’ ஏற்றுக்கொள்ளல்.

அன்பு நண்பனே, உலகளாவியரீதியான இக் கவலைக்குரிய காரியத்தை ஆழமாக ஆலோசித்து, அதற்கான காரணத்தை தேட முடியுமானால், உங்களாலும் உலகத்திற்கே பெரும் சேவையை ஆற்ற முடியும். இக்காரணத்தை தேடிக்கொண்டு அதற்கு விடுதலையை தேடி கொடுப்பதற்கு உங்களால் முடியுமானால் நீங்கள் முழு மனித சமுதாயத்திற்கே செய்யும் பெறுமதியான சேவை என நினைப்பது தவறில்லை.

ஆதலால் இதை வாசிக்கும் உங்களை நான் மேற்கூறிய உலகமையமாக்குதலின் நிலைக்கு காரணங்களை தேடுவதற்காக என்னோடு சேர்ந்து கொள்ளுங்கள் என அன்புடன் அழைக்கிறேன்.

மேலும் இதைக்குறித்து நாம் பார்க்கும்போது நாம் வாழும் இவ்வுலகம் தானாகவே உருவானதல்ல என்பதும், இவ்வுலகத்தில் மனிதவார்க்கத்தை படைத்த சர்வல்லமையுள்ள தேவன் இருக்கிறார் என்பதையும் விளக்குகிறது. இது உண்மையென்று நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களானால் உலகம் இந்த கவலைக்குறிய நிலைமைக்கு ஆளானதற்கு சில காரணங்களை காணக்கூயதாக இருக்கும்.

(I) சிருஷ்டி கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் கிரியை செய்கின்ற விதத்தை குறித்து கரிசனை செய்வதில்லை.

(ii) மனுஷனுடைய நிலையை நன்கறிந்த தேவன் தேவனுடைய நிலைமைக்கு விடுதலையளிக்க முடியாதாவர் ஆனார்.

(iii) சிருஷ்டி கர்த்தர் படைத்த மனுஷனை வழிவிலக்க அநேக வல்லமைமைகள் தேவனுக்கும் உண்டென்பதை அறிந்துள்ளார். அவ்வல்லமைகளை தோற்கடிக்க அவரால் முடியவில்லை.

(iv) சிருஷ்டி கர்த்தர் சர்வ வல்லமையுடையவராக இருக்கிறபடியால் அவரால் இந்நிலமையை மாற்ற முடிந்தாலும், அவர் மிகவும் நீதியுள்ளவர், என்பதால் எமது புத்திக்கும் மேலான அற்புதமான விடுதலையை மனிதனுக்கு அருளியுள்ளார்.

எனதன்பான சகோதர / சகோதரியே, மேற்குறிப்பிட்ட கருத்துகளின் மூன்றாவதாக நான் குறிப்பிட்ட காரணம் மிகவும் சரியானதென்று நான் விசுவாசிக்கிறேன். அவ்விசுவாசம் என்னவென்றால் சிருஷ்டிகரும், சர்வவல்லவரும், நீதியுள்ளவரும்,

மனுஷனை அளவுக்கதிகமாக நேசிக்கிறவருமான, தேவன் மனுஷனுக்குள்ள எல்லா பிரச்சினைகளிலிருந்து விடுதலையடைய விலையேறப்பட்ட ஈவை (பரிசை) நமக்கு இலவசமாக கொடுக்கவே பார்த்துக்கொண்டிருக்கிறார்.

3. <u>அன்பின் தேவன் நமக்காக இலவசமாக அளிக்க விரும்பும் விலையேறப்பட்ட பரிசு.</u>

(i) <u>மனிதகுலத்தை வற்புறுத்தும் பிரச்சினை.</u>
சர்வல்லமையும், நீதியும் மகத்துவமுள்ள அன்பின் தேவனானவர் “தமது சாயலாகவும் சுரூபமாகவும்” மனிதனை படைத்தார். (ஆதியாகமம்1:26)

மனிதன் சந்தோஷமாக சமாதானத்துடன் திருப்தியாக வாழ தேவையான எல்லாவற்றையும் ஆரம்பத்திலேயே தேவன் வழங்கினார்.

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உண்ண பார்வைக்கு பசுமையான தேவையான எல்லாவிதமான, நல்ல மரங்களுமுள்ள அருமையான தோட்டத்தை தனது வாசஸ்தலமாக கொடுத்தார். (ஆதியாகமம் 2:9) ஆதலால் ஆரம்பத்திலே மனிதன் சத்துள்ள சுவையான உணவோடு மாசடையாத சூழலில் வாழ்ந்தான். தேவனாகிய கர்த்தர் மனிதகுலத்திற்கு போலவே பூமியிலுள்ள சகல மிருகங்களையும் போஷித்தார்.

**ஆதியாகம் 1: 29, 30 :- “பின்னும் தேவன் இதோ பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகல வித பூண்டுகளையும் விதைக்கும் கனிமரங்கயாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன் அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது. பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும் ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார் அது அப்படியே ஆயிற்று”**

தேவன் மேற்குறிப்பிட்ட உணவுகளை அவருடைய சிருஷ்டிப்புக்கு கொடுத்தபடியால் முழு சிருஷ்டிப்புக்குள்ளும் பயம், சந்தேகம் இருக்கவில்லை. மனிதனுக்கும் சிருஷ்டி

கர்த்தருக்குமிடையே, மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இடையே மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே கூட சுமுகமான நல்லுறவுவே இருந்தது.

அவனுக்கு விரோதமாக இருக்கும் சாத்தான் அவர் படைத்த அருமையான உலகத்தையும் அவரால் மனுஷனுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களை திருடிக்னொள்ளவும் அவருக்கும் மனுஷனுக்குமிடையே இருந்த உறவை அழித்துவிடவும், மனுஷனுடைய எதிர்காலத்தை அழித்து வீணாக்கவும் செயல்பட்டான்.

**யோவான் 10:10 "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்…………………"**

பிசாசானவன் பொய்யினாலும், வஞ்சகத்தினாலும் மனுஷனை வஞ்சித்து தேவனுக்கு கீழ்படியாமற்போகச் செய்தான். மனுஷனுடைய கீழ்படியாமையின் பிரதிபலனாக மனுஷனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற நேர்ந்தது மட்டுமல்லாமல், மனுஷனுக்கும் தேவனுக்குமிடையே இருந்த உறவு முறிந்து நித்திய அழிவுக்கு ஆளாகினான்.

அதற்கு மேலான கவலைக்குரிய காரணம் என்னவென்றால் தேவ சாயலாக மனுஷன் படைக்கப்பட்ட நிமித்தமாக மனுஷனுக்குள் தேவனுடைய சுபாவம் ஆட்கொண்டது ஆனாலும், மனுஷன் பிசாசுக்கு ஏமர்ந்து விட்டு அவனுக்கு கீழ்படிந்ததன் நிமித்தமாக மனுஷன் தேவ சுபாவத்தை இழந்து விட்டு பிசாசானவனுடைய சுபாவத்தை தரித்துகொண்டான். அன்று முதல் மனிதனிடம் பிசாசின் சுபாவமே மேற் கொண்டது.

நாம் முதலில் உங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டவிதமாக மனித நடத்தையில் உள்ள மாற்றங்களும் நன்மை, தீமை என்ற போராட்டத்தில் தீமையே வெல்லும் சுபாவம் அதிகரித்தல் சீக்கிரமாக வளர்ச்சியும், உலகமையமாகுதல் போன்றவை இன்று ஏற்பட காரணம் பிசாசின் சுபாவமாகும்.

மனுஷன் பிசாசுக்கு கீழ்படிந்த பின்பு இவ்வுலகத்தில் பிறக்கும் எல்லா மனுஷம் பிசாசின் சுபாவம் அல்லது பாவ சுபாவத்தில் பிறக்கிறான். இவ்வுலகத்தில் பிறக்கும் எல்லா மனுஷரும் பாவசுபாவத்தினால் பிறப்பதனால் மனுஷனால் பாவமற்ற வாழ்க்கையை வாழ முடியாது. அதனால், யாருக்குமே பாவம் அல்லது தவறு செய்வதற்கு யாருமே கற்றுக்கொடுக்க அவசியமே இல்லை. பிறவியிலேயே தன்னிடமுள்ள பாவ சுபாவம் நிமித்தமாக சிறு வயது முதல் பிள்ளைகளுக்கு தவறானவைகளில் ஈடுபட வேறு யாராலும் கற்றுக்கொடுக்க அவசியமில்லை என்பதை நாம் யாவரும் அனுபவத்தால் அறிவோம்.

எனதன்பான சகோதர சகோதரியே, நம்மிடமிருக்கும் பாவ சுபாவத்தினால் எப்படி தப்புவோம் என்பது முழு மனித குலத்திற்கே உள்ள பெரும் பிரச்சினையாகும்.

## (*ii*) <u>தேவனால் இலவசமாக வழங்கியிருக்கும் விடுதலை.</u>

நம்மை படைத்த தேவன் பொய்யுரையாதவரும், மாறாதவரும் ஆவார். அன்பின் பரிபுரணமானவரும், மாறாதவருமாக இருக்கிறபடியால் மனிதன் அவருக்கு கீழ்படியாமற் போனாலும் மனுஷன் மீது அவர் வைத்த அன்பு மாறவில்லை. அந்த அன்பு நிமித்தமாக தேவனுடைய விருப்பம் என்னவெனில், அவர் ஆரம்பத்திலேயே மனுஷனிடம் வைத்திருந்த உறவை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வதாகும்.

தேவன் மிகுந்த அன்புள்ளவரும், மகா பரிசுத்தரும் ஆவார். அதனால் பரிசுத்தம் அல்லாத பாவமே அற்ற தேவனுக்கு பாவியான மனுஷனுடன் (அசுத்தமுள்ள) தொடர்பு வைத்துகொள்ள முடியாததாகும்.

அதுமட்டுமல்ல அவர் சர்வ நியாயமுள்ள தேவனாவார். அதனால் பாவியான மனுஷனுடைய பாவத்தை நியாயந்தீர்த்து அதற்கு சரியான தண்டனையையும் வழங்குவதற்கு பாத்திராகவும் இருக்கிறார்.

எனதன்பான சகோதர / சகோதரி இந்த விடுதலையற்ற கேள்விக்கு தேவன் நமக்கு கொடுத்துள்ள பதில் நம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியாத புதுமையாகும்.எந்த மனுஷனாலும் பாவத்தை முற்றிலும் துறநது வாழ முடியாது என்றறிந்த தேவன் எல்லா மனுஷனுக்கும் உரிமையான பாவத்தின் சம்பளமான மரணத்தை அனுபவிப்பதற்கு தமது ஒரே பேரான குமாரனான இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் பாவமற்ற பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்து நமது பாவத்திற்காக தமது வாழ்க்கையை கல்வாரி சிலுவையில் நமது பாவத்திற்காக பலியாக ஒப்புக்கொடுத்தார்.

ரோமர் 5:8 " நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."

தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகவும் எனக்காகவும் செய்த இப்பலியை விசுவாசித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தமது வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கிற யாவரும் அவருடைய பிள்ளைகளாவார்கள் என தேவனானவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

யோவான் 1:12 :- "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."

எனதன்பான சகோதர / சகோதரி தேவன் உங்கள் முன் வைக்கும் இவ்வாக்குத்தத்தத்தை குறித்து கவனித்து பாருங்கள்.

அவருடைய வாக்குத்தத்தம் என்னவெனில் அவருடைய பிள்ளைகளாகும் படி அதிகாரம் கொடுக்கிறார் என்பதாகும். எப்படியெனில் **"தேவ சுபாவத்தை"** நமக்குள் புதிதாக உண்டாக்க போகிறார் என்பதாகும். நம்மிடமிருக்கும் பிசாசின் சுபாவமல்லது பாவத்தின் சுபாவத்தை அப்புறப்படுத்தி அதற்கு பதிலாக தேவனுடைய பிள்ளையாக்கி தேவ சுபாவத்தை நமக்குள் உண்டாக்க போகிறார் என்பதாகும்.

2 கொரிந்தியர் 5:17 :- " இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின"

அன்பின் தேவனானவர் நமக்குள் கிரியைச் செய்யும் அசுத்தமான வல்லமைகளை நீக்கிப்போட்டு, நமக்குள் உள்ளான மாற்றத்தை ஏற்படுத்தவல்லவர் என்பது நான் இதற்கு 44 வருடங்களுக்கு முன்பதாக, அதாவது நான் 22வயது வாலிபனாக இருக்கும்போதே அவர் என்னில் செய்த பெரிய அதிசயமாகும். அதனால் முழு உள்ளத்தோடு கூறுவதென்னவென்றால் கீழ்காணும் காரியங்களை செய்யும்படி நான் உங்களிடம் முழு உள்ளத்தோடு வேண்டுகிறேன்.

1ம் படிமுறை :- உங்களுக்குள் கிரியைச் செய்யும் பாவ சுபாவங்கள் காரணமாக நீங்கள் தெரிந்தோ தெரியாமலே செய்த எல்லா பாவங்களுக்காகவும் மனந்வருந்தி தேவனிடம் மன்னிப்பைப் பெற்றுக்ளொள்ளவும்.

2ம் படிமுறை :- கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து, அவருடைய புத்திர சுவிகாரத்துக்குள் பிரவேசியுங்கள்.

3ம் படிமுறை :- தேவனுடைய பிள்ளையாக அவருக்கு கீழ்படிந்து உண்மையாக வாழ தீர்மானம் செய்யுங்கள்.

நீங்கள் இவ்விதமாக செய்யும் போது உங்களை அதிகமாக அன்பு செய்யும், தேவனானவர், உங்களை அவருடைய பிள்ளையாக ஏற்றுக்கொண்டு மேய்ப்பனாக நடத்திச் செல்வார்.

சங்கீதம் 23:1-6 :- " கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன் அவர் என்னைப்புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னை கொண்டுபோய் விடுகிறார்.................................. அவர் என் ஆத்துமாவைத்தேற்றி தம்டைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

**<u>என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.</u>**

மேற்குறிப்பிட்ட விதமாக தேவனானவர் உங்களுக்கு பெற்றுக்கொடுக்கும் விலையேறப்பட்ட, இலவசமான பரிசை பெற்றுக்கொள்ள இன்றே உங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். கீழ்காணும் ஜெபத்தை என்னுடன் ஒன்றிணைந்து கூறுங்கள்.

தேவப்பிதாவே, நீர் எனக்காக செய்துள்ள சிலுவைப்பலியை புரிந்துக் கொண்டேன். என்னுடைய பாவத்தின் தண்டணையை நீர் சிலுவையில் தீர்த்து விட்டீர் என நான் அறிந்து கொண்டேன். இயேசுவே நீர் என்னுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்ததற்காக உமக்கு நன்றி. உம்மை எனது இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு, உமது சித்தத்தின்படி என்னை நடத்தும் ஆமென்.

இவ் அற்புத நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## அப்படிச் செய்வதற்காக தேவபிதாவானவர் உங்களுக்கு பெலனும் தைரியமும் கொடுப்பாராக!!!!